


Scanned by CamScanner


விற்பனையாகிறது!
கோப்ராதீவில் ஸ்பைடர்!
மினி
லயன்
ரூ.2-50



C.I.D. ப்ருனோ தோன்றும்
முகமற்ற கண்கள்!
திகில்!
ரூ. 2/-
விற்பனையாகிறது!


மரணப் பிடி!
ஒரு நாள் இரவு—
புரபஸர் கோஸத் காணாமல் போய் விட்டாரா! என்ன உளறுகிறாய்?
தென் அமெரிக்காவில் தொலை தூர ரேடியோ தொடர்பு பற்றி விவாதிக்க யுனெஸ்கோவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு ரியோடி ஜெனிரோவில் கூடியது...


அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் அவர்கள்!
என்ன நடந்தது?
பத்து நிமிடங்களுக்கு முன், கோஸத் ஹோட்டல் லிப்டினுள் நுழைவதை பார்த்தேன். அவரை எதிர்பார்த்து ப்ரெடி நாலாவது மாடியில் தயாராக காத்துக் கொண்டு இருந்தார்!
ஆனால் லிப்ட் நாலாவது மாடியை சென்றடைந்தபோது அதனுள் கோஸத் இல்லை. லிப்ட் மூன்றாவது மாடியில் நின்றபோது எதிரிகள் அவரை கடத்திச் சென்றிருக்க வேண்டும்— மயக்கமடையச் செய்து!
...மயக்கமடையச் செய்தா?
அவர் சுபாவம் தெரியாதா உங்களுக்கு? துப்பாக்கியைக் காட்டியிருந்தார்கள் என்றால் அலறி ஊரைக் கூட்டியிருப்பார்—
எதிரிகள் இதற்குள் அதிக தொலைவு சென்றிருக்க முடியாது-வா போகலாம்!
எங்கே?


நம்மையும் சேர்த்து மொத்தம் நாலே பேர் தான் இருக்கிறேம்- இத்தனை பெரிய நகரத் தில் எங்கே என்று போய் தேடுவது?


ஒரு விஞ்ஞானியை பாதுகாக்க நாம் நால்வர்- கஷ்டமான பணியே அல்ல- இருந்தும் இப்படி கோட்டை விட்டு விட்டோம்... அரசு நம்மை தூக்கில் போடத் தீர்மானித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!




போய் சிறிது காலம் தங்கியிருந் டெஸா என்றொரு செல்வந்தரோடு- அவர் மீது எனக்கு சந்தேகம்-
அவருடைய சொகுசு கப்பல் கூட இன்றிரவு புறப்படு- வதாக கேள்வி!


முப்பதுமணி நேர இடை வெளிக்குப்பின்-பால்மா விலுள்ள ஒரு ஹோட் டலில்-
என்ன சாப்பிடுகிறாய்- கார்வின்?




Scanned by CamScanner




Scanned by CamScanner




Scanned by CamScanner




Scanned by CamScanner


பிற்பகல்- மாடஸ்டியின் இருப்பிடத்தில்...
யாரது வில்லியா?
ஆமாம்-இளவரசி! ஸர் ஜெரால்டும் உடன் வந்திருக்கிறார்!
ஸாரி—ஸார்! அமருங்கள்—இதோ வந்துவிட்டேன்!
போன் செய்தபோது ஏதோ அவசர விஷயம் என்று வில்லி குறிப்பிட்டார்! உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் பேச்சை தொடங்கலாம்!
டாக்டர் அலெக்ஸியஸ் கோஸத்— வயது 44, பிறந்தது ஹங்கேரியில்... யுத்தத்துக்கு முந்தி வெளியேறிய அகதி— கிரீஸில் படிப்பு- 1941ல் ஜெர்மனியர்கள் உட்புகுந்தபோது பிடிபட்டு... காலிரோஸ் அகதிகள் முகாமில் வைக்கப்பட்டார்!


காலிரோஸ்? அடக் கடவுளே-அந்த நரகத்திலா—
சில மாதங்களே அங்கே நான் கழித்திருக்கிறேன்-எப்போது என்று சரியாக நினைவில்லை-அப்போது எனக்கு வயது ஆறு-
கிரீஸிலிருந்து தப்பிய கோஸத் அமெரிக்கா வந்தடைந்தார்... படிப்பை தொடர்ந்தார்... யுத்தம் முடிந்ததும் ஹங்கேரி திரும்பினார். அங்கே போன பின் தான் தெரிந்தது— திரும்பி வந்தது தவறு என்று!
ஆமாம்... ஹாங்கேயின் ஆட்சி அப்படி!


1956ல் புரட்சி தலை தூக்கிய போது ஹங்கேரியிலி—ருந்து தப்பினர். இரண்டாண்டுகளுக்குப் பின் அமெரிக்க பிரஜையாகி விட்டார்!
திரும்பவும் அவரை ஹங்கேரிக்கு வரவழைக்க அந்நாட்டின் கம்யூனிஸ்ட் அரசு விரும்பியது— ஆனால் கோஸத்துக்கு அதில் நாட்டமில்லை! அதனால் இப்பொழுது அவரை ரியோ-டி ஜெனிரோவிலிருந்து கடத்திச் சென்று விட்டார்கள்!
இந்த விபரீதம் எப்படி நிகழ்ந்தது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருக்கிறார்கள் அங்கிருக்கும் அமெரிக்க புலனாய்வுத் துறையினர்!
கம்யூனிஸ்ட் நாட்டு உளவாளிகள் பெரும்பாலும் தம் நாட்டை விட்டு வெளியே வந்து இப்படி கைவரிசையைக் காட்டுவதில்லை! அதுவும் இவ்வளவு தொலைவிலுள்ள தென்னமெரிக்காவில் பிரச்சனையை உருவாக்குவது பெரும் புதிரே!
கோஸத் அந்த அளவுக்கு முக்கிய புள்ளி போலும்!
கோஸத்தின் அதியற்புத மூளை கம்யூனிஸ்ட் தேசங்களுக்கு பயன்படுவதைவிட அவருடைய மரணத்தைக் கூட ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பார்கள் இந்த அமெரிக்கர்கள்!
ஒரு பேச்சுக்கு சொன்னேன் இதை—டுக்கப்பட வேண்டிய நடவடிக்கைக்கு கோடி காட்ட அல்ல—






Scanned by CamScanner


அது ஒரு வகை ஒளிக் கதிர் இளவரசி!
அவற்றின் ஆற்றல்?
முறைப்படி ஒளிக்குவிப்பு செய்தால் ஒரு விநாடியின் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரத்தில் வைரத்தில் கூட ஓட்டை போட்டு விடும்!
கோஸத்தை மீட்க ஒரு சிறு துப்பு கிடைத்திருக்கிறது. அதுவும் கூட C.I.A. ஆட்களின் யூகம்தான்! பிரேசில் நாட்டு செல்வந்தரான டெஸாவுக்கு சொந்தமான ப்ளமிங்கோ என்ற சொகுசுக் கப்பலில் ஒரு கைதியாக அவர் பயணம் செய்து கொண்டு இருக்கலாம்!
ரியோ டி ஜெனிரோவிலிருந்து இரண்டு தினங்களுக்கு முன் ஃப்ரீ டவுண் நோக்கி பயணத்தை தொடங்கி இருக்கிறது அந்தக் கப்பல்...


டெஸா... கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவான செல்வந்தரா?
இல்லே... அவருக்கு இப்போது கடுமையான பண நெருக்கடி— அதிலிருந்து மீள எதையும் செய்வார்!
சீஸன் ஓய்ந்துபோன நேரம்... பரவாயில்லே— பிறகு பயன்படும்... நன்றி இளவரசி!
பட்டை தீட்டப்பட்ட வைரம்!
அதுசரி, இந்தப் பிரச்— சனையை அமெரிக்க உளவு நிறுவனமே ஏன் தீர்த்துக் கொள்ளவில்லே?
காபி பருகிவிட்டு பிறகு பேசுவோமே! வில்லி இந்தாருங்கள் இதை உங்கள் தோழிகளிடம் கொடுத்துப் பாருங்கள்— அதிசயம் நிகழும்!
வேறொருத்திக்கு கொடுக்கவா உன்னிடம் இதைத் தந்திருக்கிறாள்... ஹே?
இது மாதிரி என்னிடம் ஏகப்பட்டவை இருக்கின்றன— வசதிப்பட்டபோது ஒருநாள் வாருங்கள்— காண்பிக்கிறேன்!


உங்களுடைய திட்டத்துக்கு இடைஞ்சலாக இல்லை என்றால், நானும் இந்த விவகாரத்தில் பங்கேற்க விரும்புகிறேன் ஸர் ஜெரால்டு!
வரவேற்கிறேன்!
இந்த விவகாரத்தில் நீ பங்கு கொள்ள விரும்புவதற்கான காரணம் எனக்குப் புரிகிறது! கிட்டத்தட்ட நீயும் கோஸத்தைப் போலவே, வாழ்க்கையின் பெரும் பகுதியை அகதியாகக் கழித்தவள் என்பதால் கோஸத் மீது உனக்கு பச்சாதாபம் ஏற்படுவது நியாயமே!
ஆமாம்!
தாங்கள் இரண்டு பேரும் சேர்ந்தே இதில் ஈடுபடுகின்றோம்... ஜெனரல்!
டெஸாவின் சொகுசு கப்பலில் கோஸத் இருக்கிறார் என்று நூற்றுக்கு நூறு உறுதியாகாத வரை அமெரிக்க கடற்படை அந்தக் கப்பலை தடுத்து நிறுத்தி சோதனையிடத் தயாரில்லை!


யாராவது அந்தக் கப்பலுக்குள் புகுந்து, உண்மையை கண்டறிந்து தகவல் கொடுக்க வேண்டும்!
சுவாரஸ்யமான பணிதான்!
கோஸத் கப்பலில் இருக்கும் பட்சத்தில் ஒரு சுண்டெலிகூட உட்-புக முடியாதவாறு கண்-காணிப்பு இருப்பது நிச்சயம்!
வழிமுறையை நீயாகவே தீர்மானம் செய்து கொள்ள விரும்புகிறாய்— இல்லையா?
உங்களுடைய யோசனை ஏற்கக் கூடியதாக இருந்தால் மறுக்கவா போகிறேன்? சொல்லுங்கள்!
உலகை சுற்றி வரப்போகிறோம் என்று சிறியதொரு படகில் பயணத்தைத் தொடங்குகிறார்கள். இரண்டு நண்பர்கள்... வழியில் படகு விபத்துக்குள்ளாகிறது. கைவசம் உள்ள இரப்பர் மிதவையை பயன்படுத்தி தப்புகிறார்கள்!'


அந்த இரண்டு நண்பர்களாக நாங்கள் நடிக்க வேண்டும்! கோஸத்தை சுமந்து செல்லும் கப்பலின் பாதையில் நாங்கள் ''தற்செயலாக'' மாட்டிக் கொண்டால் அவர்கள் எங்களை காப்பாற்றி கப்பலுக்குள் ஏற்றுக் கொண்டாக வேண்டும்! அப்படித் தானே திட்டம்?
அமெரிக்க விமானம் ஒன்று, ப்ளெமிங்கோவினை கண்காணித்து வருகிறது. கப்பலுக்கு சற்றுத் தொலைவில் உங்களை கடலில் இறக்கி விடுவோம்!
திறந்த இரப்பர் மிதவையில் ஓரிரு தினங்கள் கழித்ததால் சூரிய ஒளிப் பட்டு மேனி சற்று கறுத்திருக்க வேண்டுமே!
அதற்கு உயர்சக்தி விளக்கின் கீழ் சில மணிநேரம் உட்கார்ந்திருந்தால் போதும்!
பயணக் குறிப்பேடுகள்... அடையாள அட்டை...?
எல்லாம் முறைப்படி நடக்கும்!






Scanned by CamScanner



Scanned by CamScanner


உங்கள் நோக்கம் என்னவென்றே புரியவில்லை எங்களுக்கு! ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்!
அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்- நீங்கள் கிளம்பலாம்!
சுட்டெரிக்கும் சூரியன் மெள்ள மேலே எழும்பத் தொடங்கியது...
இப்படியே எவ்வளவு நேரம் தான் சோம்பிக்கிடப்பது... சுத்த போர்!
கப்பலின் பார்வையில் படும்வரை கொஞ்சம் பொறுமையாக இருங்கள்!
டெஸா பற்றிய விபரங்களை மற்றுமொருமுறை படித்து நினைவு படுத்திக் கொள்வோம்.
கோஸத் கப்பலில்தான் இருக்கிறார் என்று உறுதியாக நீ நம்புகிறாயா?
C.I.A. அதிகாரிகளின் யூகம் அது- இம்மாதிரி விஷயங்களில் அவர்களுடைய கணிப்பு தவறாகி விடுவதில்லை!






Scanned by CamScanner






Scanned by CamScanner


கார்வின், மாடஸ்டியின் திட்டம் பலித்தது. நிஜ அகதிகள் என்ற நினைப்பில் ஏற்றுக் கொள்ளப் பட்டனர்...!
வாருங்கள்... மேலே—
நன்றி... மூன்று தினங்களாக அலைக்கழிக்கப் பட்டு விட்டோம்! எங்கள் படகு மூழ்கி விட்டது!
உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை போய்விட்டது— ஆண்டவன் அருளால் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்— என்னுடைய பெயர் செனே... இவள் என் மனைவி மோலி!
இருவர் மட்டும்தானா? விபத்து எப்படி நிகழ்ந்தது?
இதையெல்லாம் சாவகாஸமாக பிறகு விசாரித்துக் கொள்ளலாம் மார்வின
நல்வரவு... மிஸ்டர் செனே— நான் டெஸோ— இந்தக் கப்பலில் சொந்தக்காரன்!
மாலின்! ஒரு எழுத்தாளர். அதனால்தான் விபரம் சேகரிப்பதில் அப்படியொரு துடிப்பு!


நாங்கள் அப்படியில்லை... நீங்கள் உணவருந்தி ஓய்வு எடுத்துக் கொண்டபின் சாவகாஸமாக பேசிக் கொள்ளலாம்... போங்கள்!
கப்பல் பதிவேடும், மூன்று வார பணய பதிவேடும் இதோ!
நல்லது! இவரோடு செல்லுங்கள்-உங்களுக்கு ஓர் அறை ஏற்பாடு செய்வார்—உங்களுடைய மற்ற தேவைகளுக்கும் அவரிடம் சொல்லுங்கள்!
மிக்க நன்றி-மிஸ்டர் டெஸா!
தங்களுக்கு கொடுக்கப்பட்ட அறையை அங்குலம், அங்குலமாக பரிசோதித்தார் கார்வின்-
ஒட்டுக் கேட்கும் கருவி ஏதுமில்லை... நாம் தாராளமாக உரையாடலாம்!
அந்த ஆள்மார்லினுக்கு இங்கு என்ன வேலை?
...ஆராய்ச்சிக்குரிய விஷயம்! உச்சரிப்பை வைத்து கணித்—தால் ஹங்கேரி நாட்டவன் போல் தெரிகிறது!


இந்த அறை இரகசியமாக சோதனையிடப்படுவது உறுதி—இந்த ஆயுதங்களை ஒழித்து வைக்க வேண்டும்!


நாம் இங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும்... சொல்!
குறைய பேசி, நிறைய கேட்போம்— விஷயங்களைகிரகித்துகொண்டு அடுத்த நடவடிக்கையை தீர்மானிப்போம்!


கோஸத்தை தேடும் புணியை தொடங்குவது எப்போது?
இரு தினங்களுக்கு அப்புறம்! எஞ்சின் அறையில் ஆர்வம் காட்டுங்கள். முடிந்தால் சிப்பந்திகளின் இருப்பிடத்தினுள்ளும் பார்வையை நீளவிடுங்கள்!


டெஸாவின் அலுவல் அறையில்—
அவர்கள் உளவாளிகள் அல்ல என்று நினைக் கிறீர்களா?
உலகம் சுற்றும் வெறியில் இருவரும் புறப்பட்டிருக்—கிறார்கள்! இந்தப் பதிவேட்டின்படி, விபத்து இரவில் நிகழ்ந்திருக்கிறது! படகின் அடிப்பாகம் சேதம் அடைந்து விட்டதால், மிதவையில் தப்பியிருக்கிறார்கள்!
பதிவேடு நன்றாக உள்ளது... பயணக் குறிப்பேட்டில் முழு விபரமும் கொடுக்கப்பட்டிருக் கிறது— அத்தோடு இவர்கள் அமெரிக்கர்கள் அல்ல— பிரிட் டிஷ்காரர்கள். நிச்சயமாக C.I.A. ஆட்களல்ல!
முதல் இரு விபரங்களை வேண்டுமானால் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்த முதலாளித்துவ நாட்டு உளவாளிகள் தோழமை நாட்டுக்காக பணியை மேற்கொள்-வதுண்டு என்ற உண்—மையை நாம் மறந்து விடலாகாது!
இவர்கள் இருவருக்கும் வலைவிரித்து வைப்-போம். குட்டு வெளிப்-பட்டு விடும்!


இவர்கள் கோஸத்தை தேடிவந்த உளவாளிகளாக இருக்க முடியாது மார்லின்— அதிலும் அந்தப் பெண்ணின் விழிகளில் எந்தக் கள்ளமும் இல்லே!
அங்கே-
சரி-நாம் இப்போது மேலே செல்லலாம்—வில்லி! உங்களுடைய ஹாஸ்ய உணர்வை கொஞ்சம் முடக்கி வையுங்கள்! குறிப்பாக அந்த மார்லினிடம் எக்கச்சக்கமாக எதையாவது கேட்டு வைக்காதீர்கள்!
ஹாய்... அதோ நம் புது விருந்தினர்கள்! மிஸஸ் செனே... குட் ஈவ்னிங்!
எல்லாம் உங்கள் தயவு மிஸ்டர் டெஸா!
என் பெயர் மார்காரிடா... என் அருகே அமரவேண்டும் நீங்கள்— உங்களுடைய பயண அனுபவங்களை கேட்க என்னமாய் துடிக்—கிறேன் நான்... தெரியுமா?
இரவு உணவு பரிமாறப்பட்ட பின் மது பானம் வினியோகிக்கப்பட்டபோது—
ஓ... ஷ்யூர்— மிஸ்... ஹம்... மார்காரிடா!






Scanned by CamScanner


இந்த டீஸல் எஞ்சின் 2000
குதிரை சக்தியுடையது...
ஸார்!
இம்மாதிரி தொழில்நுட்ப விவகாரங்களில் உன் கணவனுக்கு ரொம்ப ஈடுபாடு போலும். உனக்கு என் ஆடம்பர அறையை காண்பிக்கிறேன் வா!
ஓ... வாருங்கள் போவோம்!
நான்கு நாட்கள் கழிந்துவிட்டன. ப்ரீடவுனைதொட இன்னும் 12 மணி நேரபயணமே பாக்கி...
ஒரு நிமிடம் இப்படி வர முடியுமா?
ஓ... இதோ!
பயல் கண்டபடி அலைகி–கிறான் என்று இவளுக்கு பொறுக்கவில்லை– ஒரு குடும்பச் சண்டைச்–கான பூர்வாக்கம் இது
இவள் எப்படி?


தாராளமாக நடந்து கொள்பவள் போல்தான் தோன்றியது-ஆனல் திடீரென்று ஒதுங்க ஆரம்பித்து விட்டாள்-
நெருக்கத்திலும் உண்மைகளை வெளியிடாத அழுத்தமான ஆசாமி நீங்கள் என்று புரிந்துவிட்டிருக்கும் அவளுக்கு-
நீங்கள் விரித்த வலையில் இவர்கள் சிக்கவில்லை... கவனித்தீர்களா மர்லின்!
இன்னமும் அதற்கு அவகாசம் இருக்கிறது!
மாடஸ்டியும் கார்வினும் தங்களுடைய அறையில்...
கப்பலை அங்குலம் அங்குலமாக அலசியாயிற்று... ஓரிடத்தைத் தவிர!
கோஸத் கப்பலில் இருக்கும் பட்சத்தில் அங்கே தான் இருக்கக் கூடும்!
ஏதோ என் காது மடலில் குறுகுறுக்கின்றது இளவாசி! ஆபத்து வரப் போகிறது என்று எச்சரிக்கிறது என் உள்ளுணர்வு!
வந்தாயிற்று-இங்கே-ஆபத்தை எண்ணி பயந்தால் எப்படி?


கோஸத் அங்கே இருக்கும் பட்சத்தில், ஆபத்தான் முயற்சியாகத்தானிருக்கும் இது!
கப்பலின் அடித்தளத்தில் .எப்போதும் பூட்டியே கிடக்கும் அந்தச் சிறிய அறையை எப்படியேனும் சோதனை போட்டுவிட வேண்டும் வில்லி!
சந்தேகமில்லாமல்!
இன்றிரவு வைத்துக் கொண்டுவிடலாம்!
விடிவதற்குமுன் கப்பல் ப்ரீடவுன் சென்றடைந்துவிடும். நாம் தரையிறங்குமுன், கப்பலில் கோஸத் இருக்கிறாரா இல்லையா என்று உறுதியாக தெரிந்துகொண்டு விடுவது அவசியம்!
நள்ளிரவுக்குப் பின்-
நான் வர வேண்டாமா-உங்களோடு?
தனியாக நான் செல்வதுதான் பாதுகாப்பானது. பத்து நிமிடத்தில் திரும்பிவிடுவேன். ஒரு வேளை நான் பிடிபட்டால் மார்காரிடாவை தேடியலையும் சபலசித்தனை நாடகமாடப் போகிறேன் . !


ஒருவேளை நான் கோஸத்தை கண்டுபிடித்து விட்டால்— அடுத்து நான் செய்ய வேண்டியது . ?
ஏதுமில்லை! ப்ரீ டவுனிலுள்ள ஸர் ஜெரால்டின் ஆசாமியிடம் தகவல் கொடுத்தால் மிச்சத்தை அமெரிக்க கடற்படை கவனித்துக்கொள்ளும்!
ரொம்ப டல்லான காரியமாக தோன்றுகிறது!
அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்த வேளையில் பதுங்கி பதுங்கி நடந்தார் கார்வின் ..
கோஸத் இங்கே இருந்தால் இளவரசி எதிர்பார்ப்பது போல இவர்கள் அவரை சுயவுணர்வற்ற நிலையில் வைத்திருந்தால் நல்லது. இல்லையேல் கலாட்டா பண்ணி ஊரைக்கூட்டிவிடும் அபாயமுண்டு.
34



கள்ளச் சாவியை பயன்படுத்தி பூட்டைத் திறந்தார் கார்வின்...
உள்ளே —
அடிச்சேண்டா .. லக்கி பிரைஸ்! அதோ நிச்சயம் புரபஸர் கோஸத் தான்அது!
ஆனல்-
மிஸ்டர் செனே — யாரைத் தேடுகிறீர் கள்?
ஓ... மர்லின்— இது இவருடைய அறையல் லவே!
தவருன தளத்துக்கு வந்துவிட்டேன் போலிருக்கிறது! இது மார்காரிடா வின் அறை என்றல்லவா எண்ணி வந்தேன்! அவள்தான் என்னை வரச் சொல்லியிருந்தாள். கதவு வேறு சும்மா சாத்தியிருந்தது


...இதை என் மனைவியிடம் சொல்லிவிடாதீர்கள்— குதறிவிடுவாள் என்னை..! ஸாரி—
மார்கரிடாவின் அறை மேல் தளத்தில் இருக்கிறது போலும்
பரவாயில்லை மிஸ்டர் செனே- தவறு செய்வது மனிதஇயல்பு! என்ன நான் சொல்வது சரிதானே?
திடீரென—
சிரமத்திற்கு மன்னித்— ஹாஆஆ...!
ப்ரீடவுன் துறைமுகத்தில்— ப்ளெமிங்கோ வந்தடைந்து எட்டு மணி நேரம் கழித்து ...உச்சி வேளையில்—
பயணத்தை தொடர முடியாத சூழ்நிலை ! நீங்கள் அனைவரும் ஊர்திரும்ப விமான பயணத்திற்குஏற்பாடு செய்திருக்கிறேன்



துறைமுகத்தை வந்தடைந்ததும் அந்த செனே தம்பதிகள் இரகசியமாக நழுவி விட்டது ஆச்சரியமாக இல்லே?
ஆமாம் . அவர்களுடைய இரப்பர்மிதவையும் மாயமாக மறைந்து விட்டது. இதை நான் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருக்கிறேன்.
ஆனல்—கார்வினும் மாடஸ்டியும் மயக்க மருந்து ஏற்றப்பட்டு கட்டிலோடு கட்டிப்போடப்பட்டிருந்தனர் அவர்களுடைய அறையில்.
ப்ளெமிங்கோ தன் பயணத்தை தொடர்ந்தது!
செனே என்று தன்னே சொல்லிக் கொண்ட அந்த பயலுக்கு நினேவுதிரும்பிவிட்டது மர்லின் ஆனல் அந்த பெண் இன்னும் சுயவுணர்வு பெறவில்லே!
பேச மறுத்தாஞ?... அச்சுறுத்தினை . ?
இல்லே- முகத்தை சுவர் பக்கமாக திருப்பிக்கொண்டான். அதில் எதையும் நாம் படித்தறிந்து விடக்கூடாது என்று அவன் எண்ணியிருக்கலாம்


அங்கே— தன் விலங்கை உடைத்து திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந் தார் கார்வின் ..
இளவரசி . விழித்துக் கொள் —
ம் சீக்கிரம் — ஹலோ –
அஹ்ஹ
வில்லி...எ..எ..என்ன நடந்தது!
நம் குட்டு வெளிப்பட்டு விட் டது! தன் விருந்தினர்களை ப்ரீடவுனில் கழற்றி விட்டு விட்டான் டெஸா . அடுத்து எந்தநிமிடமும் நம்மையும் அனுப்பிவிடுவான் — கடலுக் குள்ளே!






Scanned by CamScanner


உடையணிந்து கொண்டு அந்த அறைக்கு தேடிவந்தேன்... என்னை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்திருப்பார்கள் போலிருக்கிறது ..
அங்கேநான் இன்னும் சற்றுவிழிப்போடு சென்றிருக்க வேண்டும்
தொலைகிறது விடு— இனி ஆகவேண்டியதை கவனிப்போம்!
சரியா?
பிரமாதம்!
வந்ததும் முதல் காரியமாக ஆயுதங்களை ஒழித்து வைத்தது நல்லதாகப்போயிற்று!
பத்துப் பன்னிரண்டுபேரை நாம் சமாளிக்க வேண்டியிருக்கும் ..


டெஸாவை பிணைக் கைதியாக பிடித்து விட்டால் போதும்
இல்லை- வேறு உபாயத்தை கையாளுவோம்! மறுபடியும் விலங்கை (போலியாக) பிணைத்துக்கொள்ளுங்கள் சொல்கிறேன்—
அதுசரி— கோஸத் இப்போது எங்கேஇருக்கிறார்? அவர்அந்த சிறிய அறையினுள்தான் இருந்திருக்க முடியும்! ஆனால் அங்கில்லை! அவர் கப்பலில் இல்லை என்றால் நம்மை ஏன் இப்படி படுத்துகிறார்கள்
எங்கோ .. ஏதோ ஒரு முக்கியவிஷயத்தைகோட்டை விட்டுவிட்டோம் என்று தோன்றுகிறது!
யாரோ கதவை திறக்கும் சப்தம்—
இன்னும் நாம் அப்படியே பிணைக்கப்பட்டுக் கிடக்கிறோம்— எழவேயில்லை!


நாம் ஒருவருக்கொருவர் மற்றவரின் உள்நோக்கத்தை தெளிவாகவே புரிந்துகொண்டு விட்டோம்.. விவாதத்திற்கு அவசியமே இல்லாதபடி!


அடுத்து ..?
உடனடியாக உங்களை கொன்றுவிட வேண்டும் என்பது என் தீர்மானம். ஆனால் மர்லினுக்கு தன் மேலதிகாரிகளை கலந்தாலோசிக்க வேண்டுமாம்!


செய்தியனுப்பியிருக்கிறார் .. இன்றிரவுக்குள் மறுமொழி வந்து விடும். ஆனால் அது என் தீர்மானத்தை எவ்விதத்திலும் பாதிக்கப்போவதில்லை!


டியர் உன்னையும் கொல்ல வேண்டியிருக்கிறதே என்பதில் எனக்கு எவ்வளவு வருத்தம் தெரியுமா — என்ன செய்வது?
உன் சிப்பந்திகள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்!



நீண்ட காலமாக என்னிடம் விசுவாசமாக ஊழியம் புரிந்து வருகிறவர்கள் . அவர்கள் அனைவரும்! இந்தப்பயணம் எனக்கு மில்லியன் டாலர்களை சம்பாதித்துக் கொடுக்கும்- டெஸா சாம்ராஜ்யத்தை தூக்கி நிறுத்த இந்தத் தொகை உதவும்!
மில்லியன் டாலரா? அப்படியானல் கோஸத் கப்பலில் தான் இருக்கிறரா?
இனி அதை தெரிந்து கொண்டு உனக்கு ஆகப்போவது என்ன?
கோஸத்துக்கு கூடுதல் விலை பெற்றுத்தர எங்களால் முடியும் — யோசித்துப் பார்!
கோஸத் என் வசம் தான் இருக்கிறர் என்று தீர்மானித்து விட்டாயா?
அவர் அப்படி என் வசம் இருந்து, நான் உங்களிடம் கூடுதல் தொகையை பெற்றுக் கொண்டு உங்கள் நாட்டிடம் கோஸத்தை ஒப்படைத்து விட்டால் மர்லின் என்னை சும்மா விடமாட்டான்! என்னை பழி வாங்கி விட்டுத் தான் மறு வேலை பார்ப்பான்!


அத்தோடு நான் ஒரு நாணயமான வியாபாரி. பேச்சு மாற மாட்டேன்— கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற போதிலும்!
நம் அடுத்த நடவடிக்கை என்ன... இளவரசி?
உயிரோடு வெளியேறுவது!- நேரடி மோதல் வெற்றி பெறாது!
நள்ளிரவு வரை பொருத்திருப்போம்..எஞ்சினை இயக்குபவனும் துணைக்கு ஒரு அதிகாரியும் மட்டுமே விழித்திருப்பார்கள் அவர்களை தீர்த்துக் கட்டிவிட்டு கப்பலை தரைதட்டச் செய்வோம்
நாம்அப்போதுகோனர்க்கிக்கு வடக்கே இருப்போம்.. மணற்பாங்கான கடலோரமும்அதை அடுத்திருக்கும் அடர்த்தியான காட்டுப் பிரதேசமும் நமக்கு சாதகமாக இருக்கும் ..
அப்படியே செய்து விடலாம்...!




Scanned by CamScanner


உங்களை அவர்கள் கொல்லப் போகிறார்கள். அதை நான் விரும்பவில்லை. நான் உங்களுக்கு உதவி செய்யவேண்டும் எவ்வகையிலாவது!
நல்ல் தீர்மானம்தான்—ஆனால் ..
தயவுசெய்து விவாதம் செய்வதில் நேரத்தை வீணடிக்காதீர்கள்! உங்களுக்கிருக்கும் ஒரே வாய்ப்பு இதுதான்! இது தோற்றுப்போனால் பிறகு நான்வேறு வகையில் உதவ முடியாது
நடுங்கும் விரல்களால் கார்வினின் கைவிலங்கை திறந்தார்
உங்களுடைய இரப்பர் மிதவை இரண்டாம் எண் லைஃப் போட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது! பிறர் அறியாவண்ணம் அதில் நீங்கள் பயணம்செய்து போய்விட முடியுமோ. என்னவோ?
வில்லி ..
... வீழ்த்துங்கள் அவரை!
கும்!
கேள்வி கேட்காமல் செயல்பட்டார் கார்வின்—
46


எதற்காக .. இளவரசி
ஏதோ உண்மையை நாம் கோட்டை விட்டதாக நேற்று சொன்னீர்களே- அது.. இதுதான்!- இவர் .. புரபஸர் கோஸத்!
என்ன . கோஸத்தா?
ஆமாம் சிறுதாடி தான் வித்தியாசம்
நாம் இவரை இங்கே கைதியாக எதிர்பார்த்து தேடினேம்! ஆனல் இவர் ஏனே இஷ்டப்பட்டே இவர்களோடு வந்திருக்கிருர்— காரணம் தெரியவில்லே!
இவருக்குமூர்ச்சை தெளிய சற்று நேரமாகும்-அதற்குள் நாம்போய் நம் திட்டத்தின் முதல்கட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பிவந்துவிடலாம்!
பலாத்காரத்தைபிரயோகிப்பது பற்றி - ?
அவசியப்பட்டால் மட்டுமே கத்தியை பயன்படுத்துங்கள் ... எனக்கு காங்கோ இருக்கிறது!


எஞ்சின் அறையில் . இவர்கள் கணித்தபடி இருவர் மட்டுமே இருந்தனர்...
வலப்பக்கமுள்ள ஏணியை நான் சென்றடைய இரு நிமிட அவகாசம்கொடுங்கள்! அதன்பிறகு அந்த அதிகாரியின் அருகே நம்மில் யார் இருக்கிறேமோ அவர்கள் அவரை வீழ்த்த வேண்டும்...முதலில்!
சக்கரத்தை பிடித்திருப்பவனின் பார்வை கீழ்நோக்கியே இருக்கும். காம்பஸின்மீது கவனமாக! இரண்டாவதாக அவனை வீழ்த்தலாம்...
ஓ. கே. !
**காங்கோ** என்பது டம்பெல் போன்ற சிறுகட்டை, திறமையான கரம் அதை சாகஸத்தோடு கையாளும்போது படு பயங்கரமாகஆயுதமாகி உடம்பின் நரம்பு மண்டலத்தை இயக்கமிழக்கச் செய்துவிடும்!


காவல் அதிகாரி மாடஸ்டியின் அருகே! எனவே அவள் அவனை வீழ்த்தும்வரை நான்பொறுத்திருக்க வேண்டும்
மாடஸ்டி அவனை நோக்கி பாய்ந்தபோது அவன் சட்டென திரும்பினான் —
மறுகணம் — அலாரம் அமைப்பை நோக்கி நீண்டகரத்தை காங்கோ செயலிழக்கச்செய்தது.
மறுபடியும் காங்கோ அந்த அதிகாரியை தாக்கிய போது வெட்டப்பட்ட மரம் போல் சரிந்தான்.


கப்பலை செலுத்தும் பொறுப்பு இனி என்னுடையது! நீ போய் ஒரு நோட்டம் விட்டுவிட்டு வா. இளவரசி!


விவகாரம் ஏதுமில்லையே?
யெஸ் – நடமாட்டமே இல்லை! அமைதியாக தூங்குகிறார்கள் போலும்!


நான் ஓட்டுகிறேன் நீங்கள் போய் கோஸத்தை இடப்புறமுள்ள படிக்கட்டுக்கு இட்டுச்சென்று, கீழே இறக்குங்கள். விழித்துக் கொண்டு விடுவார்போலிருந்தால் வாயில் துணியை அடையுங்கள்!


மாடஸ்டி சக்கரத்தை சுழற்றினாள்.. அரை வட்டமடித்துதிரும்பிய ப்ளெமிங்கோ அருகேயிருந்த தீவைநோக்கி விரைந்தது...


நீ சொன்னபடி செய்து விட்டேன்இளவரசி. கோஸத்துக்கு இன்னும் சுயவுணர்வு திரும்பவில்லை.
அடுத்த மூன்ருவது நிமிடம் பீச்சில் போய் கப்பல் தரை தட்டி நிற்கப்போகிறது ..
விசையோடு போய் மோதி மணலில் நன்ருக செருக வேண்டும். நீங்கள் கோஸத்தோடு முதலில் வெளியேறுங்கள் ..
கார்வின் அகன்றதும் வேகத்தை உச்சப்படுத்திஞள் மாடஸ்டி...
178
பலத்த அதிர்ச்சியோடு தரைதட்டி நின்றது அந்தக் கப்பல்...


கப்பலினுள்-
என்ன விபரீதம் இது?
பதில் சொல்லித் தொலே- உடனே!


கரையேறி, தொடர்ந்து போய்க் கொண்டேயிருங்கள் காட்டுப் பகுதியினுள்ளே!


குழப்பம் தலைதூக்கியது—
டெஸா .என்ன நடந்தது?
கப்பல் தரை தட்டிவிட்டது- அந்த இரு விஷமிகளின் வேலையாகத்தானிருக்கும்


கண்காணிப்பு விள்க்கொளியை பாய்ச்சு.. எல்லோரும் தளத் துக்குவாருங்கள் துப்பாக்கி களோடு!



சுயவுணர்வு வரப்பெற்ற கோஸத் திமிறினர் .
நோ...ப்ளீஸ்—உங்களுக்கு புரியவில்லை...
ஊஹூம்..காலம் கடந்து விட்டது, நண்பரே! இனிப் பேசிப் பயனில்லை
கோஸத் ரொம்பவும் முரண்டு பண்ணினர்—
மீண்டும் மயக்க முறச் செய்வதை தவிர வேறு வழி வழியில்லை
விளக்கொளியை பாய்ச்சுவார்கள் நம்மைகுறி வைத்து—
மணிக்கட்டில் ஒரு குறிப்பிட்ட நரம்பை கராங்கோவினல் ஒரு தட்டு தட்டினுள் மாடஸ்டி ..
இதுபோதும்.. இப்போதைக்கு! ம்— ஓடுங்கள் புரபஸர்!



தொலைதூர விளக்கு திடீரென்று உயிர் பெற்று கடற்கரையை மெள்ள தடவியவாறு நகர்ந்தது-
கைமிஞ்சிவிட்டது டெஸா! பாதுகாப்பான இடத்திற்குபோய் விட்டார்கள்
அதோ..... நிறுத்து-
இரவில் அதிக தூரம் போயிட முடியாது. விடிந்ததும் தேடத் தொடங்குவோம்.
கஸாடோ, கப்பலை மீண்டும் மிதக்கவிட முயற்சி செய்.
ரொம்ப அழுத்தமாக செருகிக் கொண்டிருக்கிறது பாஸ்! லேசில் மீட்க முடியாது-
அடர்த்தியான காட்டு பகுதியினுள்-
இம்மாதிரி பிரதேசங்கள் உங்களுக்கு பழக்கபட்டவை-இல்லையா வில்லி?
ஆம்-நான் வழி நடத்தி செல்கிறேன்


அரைமைல் தொலேவு உன்ளுக்குள் சென்று தங்கி இரவை கழிப்போம். காலேயில்தான் தேடி வருவார் களென்று நினைக்கிறேன்.
ஆ.....அம்மா.....
பசியாற பழங்களும், கொட்டை களும் தாராளமாக இருக்கின்றன இங்கே. சிற்றோடைகளுக்கும் குறைவில்லே.
இனி அதிகம் வலிக்காது. இனியாவது விவேகமாக நடந்து கொள்ளுங்கள்
என்னேப்போக அனு மதியுங்கள். எனக்கு உதவி செய்வதாக நினைத்து கொண்டு. உபத்திரவம் செய்கிறீர்கள்!
ஆம்- நீங்கள் கடத்த படுவதாக எண்ணி மீட்கும் நோக்கத் தோடு வந்தோம். ஆனல்.....


நிஜம் புரிந்து விட்டது இப்போது.எப்படியிருந்தாலும் உங்களை திரும்ப அழைத்துச் செல்லும் எங்கள் முடிவில் மாற்றமில்லே.
அறிவும் திறமையும் நிறைந்த அழகிய யுவதி இப்படி யோசனையின்றி பேசுகிருளே என்றுதான்-
உங்களை எண்ணி பரிதாபப் படுகிறேன்,புரபஸர்.
திறந்த பாறை பகுதியில்-
தீ மூட்டினுல் குளிர் காய்ந்து கொள்ள முடிவதோடு,பூச்சிகள் அண்டாமல் தவிர்கலாம்,
நம் வி.ஐ.பி. விருந்தினர் ஏதாவது சொன்ஞரா இளவரசி?
அவர் சொல்வதற்கு என்ன இருக்கிறது?
வாழ்நாளில் பாதியை அகதியாக கழித்த இடத்தை நாடி மீண்டும் வலிய ஓடுகிறீர்களே!
துல்லியமான கணிப்பு.ஆனல் தவருனது.


கப்பலில்-
கோஸத் உயிரோடு கிடைக்காவிடில் பிணமாகவாவது வேண்டும், டெஸா. தொகையும் அதற்கு தகுந்த மாதிரி குறைத்துக் கொள்ளப்படும்.
உயிரோடு பிடித்துத் தருகிறேன் அவரை.
மேலும் தெற்கே செல்ல, நதியின் மேல் பகுதியை நோக்கி அவர்கள் நடக்கணும் தாண்டுவதற்கு ஒரு குறுகலான இடத்தை தேடி. நானொரு படகில் சென்று அவர்களை வளைத்துவிட முடியும்.
காளகத்தினுள் –
வெந்தது போதுமா .....பார்.
சீக்கிரம் நாம் இடத்தை காலி செய்துவிட்டு ஓடி போய்விட வேண்டும்!
நான் ஹங்கேரிக்கு திரும்பி செல்ல தீர்மானித்ததற்கு ஒரே ஒரு காரணம்.....


.....என் குழந்தை அங்கே அவர் களிடம் இருப் பது தான்.
உங்கள் குழந்தையா? நீங்கள் திருமணம் செய்து கொள்ளவே இல்லையே!
தந்தையாவதற்கு திருமணம் ஒரு அவசியமில்லை என்றுனக்கு தெரியாதா பெண்ணே?
கிரெடாவும் நானும் ஒருவரையொருவர் நேசித்தோம். திருமணம் செய்து கொள்ள தீர்மானித்த போதுஹங்கேரியில்புரட்சி தலைதூக்கியது. தப்பி வெளியேறியவர்களில் நானும் ஒருவன்.
அந்த மாது.....?
தன் தாயை பார்க்க சென்றிருந்தாள், என்னை பின்தொடர்ந்து வருவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால்புரட்சி சட்டென்று அடக்கப்பட்டுவிட்டது! நாட்டை விட்டு எவரும் வெளியேற முடியாதபடி கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது! அதனால் என்னைப் பின்தொடர்ந்து அவளால் வர இயலவில்லை!


உண்மையை சொல்வதானால், கிரெடாவை நேசித்ததைவிட என் சுதந்திரத்தை நேசித்தேன். ஆனால் என் குழந்தை அவள் வயிற்றில் வளர்வது தெரிந்திருந்தால் நான் வெளியேறியிருக்கவே மாட்டேன்.
இப்போது என் மகளுக்கு ஆறு வயது. பிறந்த உடனேயே தாயை இழந்துவிட்டவள்.
இவற்றை எப்போது தெரிந்து கொண்டீர்கள்?
டெஸா, என்னை ரியோடி ஜெனிரோவில் சந்தித்தபோது-விஷயத்தை உறுதிபடுத்தும் குறிப்பேடுகள், புகைபடங்கள், கிரெடாவின் கடிதங்களையும் காட்டினார். என் நம்பிக்கைக்குரிய ஒரு ஸ்பானிஷ் தூதரக அதிகாரி அனைத்தும் நிஜம் என்று சான்றளித்தார்.
ஓ.....அந்த சான்றுகளை சந்தேகிக்க இடமே கிடையாது.
கடவுளே..... இந்த விஷயம் இளவரசியை மனமுருகச் செய்திடுமே!




★சிறு வயதில் அனாதையாக அகதி முகாமில் மாடஸ்டி. பார்க்க: ''மாடஸ்டியின் கதை'' (லயன் வெளியீடு எண்: 28)


அங்கே ஒரு ஆறு வயது சிறுமியின் அனுபவம் எப்படியிருக்கும் என்று நினைத்து பாருங்கள்.
காலிரோஸ்? நரகமாயிற்றே அது. அந்த முகாமில் இருந்த எந்த குழந்தையும் பிழைத்து வெளியேறியதே இல்லை.
இல்லை ஒரு சிறுமி தப்பியோடி வந்திருக்கிறாள். அந்நாளில் அவளுக்கு நேர்ந்த பயங்கர அனுபவங்களை மறுபடியும் நினைவு படுத்திவிட்டீர்கள் புரபஸர். அந்த சிறுமி மாடஸ்டி பிளைஸி தான்!
காலிரோஸ் முகாமில் சிறு ரொட்டி துண்டுக்காக பெரிய கலகமே நடக்கும். அங்கே எப்படித்தான் காலத்தை கழித்தாளோ. அதுவும் ஆதரவற்ற சிறுமியாக.
அவற்றை எல்லாம் இப்போது எண்ணி மனம் நொந்து போவதில்லை அவள்.
ஆனால் என் மகளின் அவல நிலையைஎண்ணி மனம் நெகிழ்ந்து விட்டதாக தோன்றுகிறது.



பெண்ணே, என்னை நீ மன்னிக்கவும். சிறுவயதில் உனக்கு ஏற்பட்ட சோதனைகளை உன் நண்பன் மூலம் இப்போது தான் கேட்டறிந்தேன்.
ஹூம், எப்போதோ நடந்துபோன பயங்கரங்கள். என்பெற்றோரை எனக்குத் தெரியாது. ஆனால் என்றுவதுவருவார்கள் என்று நான் கனவு காண்பது உண்டு.
உங்களுடைய மகளும் இப்படியொரு கனவு கண்டு கொண்டிருக்கக்கூடும்.
அவளுடைய கனவை நனவாக்கத்தான் நான் போய்க் கொண்டிருக்கிறேன்.
நாங்கள் குறுக்கிட்டுவிட்டோம் .....இல்லையா?
யெஸ்.
விடியப்போகிறது இளவரசி. நாம் புறப்பட ஆயத்தமாவோமா?
ம்ம்.....
பயங்கர ஆயுதமான கான்கோவை கையில் எடுத்து கொண்டாள் மாடஸ்டி.



அவருடைய கைகளில் விலங்கை பூட்டவேண் டியது அவசியமல்லவா?
தேவையில்லே, வில்லி-
எதிர்பாராவிதமாக கார்வினே கான்கோ விஞல் அடித்து வீழ்த்திஞன் மாடஸ்டி.
சாரி... வில்லி!
ஆல்ரைட். புரபஸர் கோஸ்த், நீங்கள் டெஸாவிடம் திரும்பி போகலாம், இப்போது.
மேற்கு நோக்கி நடந்தீர்களாஞல் பதினேந் தாவது நிமிடம் கடற்கரை வந்துவிடும் டெஸாவின் கப்பல் இன்னமும் அங்கேயே இருப்பது நிச்சயம்.
இதெல்லாம் நிஜம் தாஞ..... கனவல்லவே?




Scanned by CamScanner






Scanned by CamScanner


நீ அவரை விடுவித்து அனுப்பியது நான் எதிர் பாராத ஒன் றல்லதான்.
என் மனதை சரியாக படித்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.
ஒரு அனாதைச் சிறுமியின் அவலங்கள் என்னைப் போல, இன்னொரு அனாதைக்குத் தான் புரியும் வில்லி!
கோஸத் தானகவே இப்படி திரும்பி வருவார் என்று டெஸா கொஞ்சமும் எதிர் பார்த்திருக்க மாட்டான்.
இனியும் நம்மை வேட்டையாட பின் தொடர மாட்டார்கள் என்று நம்பலாம்.



ஆனாலும் நம் வழியில் குறுக்கிடும் பல ஆபத்தான ஆறுகளை கடந்தாக வேண்டும் மாடஸ்டி.
என்ன சொல்லி என் செய்கையிலுள்ள நியாயத்தை ஸர் ஜெரால்டுக்கு புரிய வைக்கப் போகிறேனோ விளங்க வில்லை, வில்லி.
மூன்று வாரங்களுக்குப்பின் இலண்டனில்-
யார் ப்ரேஸரா? மாடஸ்டி பிளைஸி!
இப்போதுதான் வந்து சேர்ந்தேன் அங்கே ஒரு மணி நேரத்தில் வந்தால் ஸர் ஜெரால்டை நான் சந்திக்க முடியுமா?
தூதர் மூலமாக நீ அனுப்பிய சிற்றறிக்கை, நடந்ததை தெளிவாக விளக்குகிறது - எந்த சமாதானமும் ஒத்து கொள்ள கூடியதாக இருக்கப்போவதில்லை.


உண்மைதான். நேரில் பேசி தெளிவு படுத்திவிட விரும்புகிறேன். கார்வின் இலண்டன் விமான நிலையத்தி லேயே விடைபெற்று சென்று விட்டார் என்று அவரிடம் தெரிவியுங்கள்.
விரைவில்...
புரபஸர் கோஸத் நம் நாட்டினரை பொறுத்தவரை அரிய சொத்து என்றுனக்குதெரியும். அவர் கடத்தபடவில்லை, தன்னிச்சையாகத்தான் நாட்டை விட்டு வெளியேறுகிறுர் என்று அழுததும் போக அனுமதித்து விட்டாயாக்கும.
உன்னிடம் விளக்கம் கோரவோ தண்டிக்கவோ இயலாது. ஏனெனில், நீ அதிகாரபூர்வமாக என்னிடம் பணி யாற்றுபவளல்ல.
அரைமணி நேரத்திற்கு முன் கார்வின் இங்கே வந்து நீ செய்திருக்கும் காரியத்திலுள்ள நியாயத்தை எடுத்துரைத்து உனக்காகவாதாடினுன்!
ஒ.....இதற்குத் தான் விமான நிலையத்தில் டிமிக்கிகொடுத்துவிட்டுஓடிப் போனுரா!


இந்த விவகாரத்தில் வில்லிக்கு எந்த பங்கும் கிடையாது.
தெரியும். அதற்காகவே அவரை கான் கோவை வைத்து முடக்கியிருக்கிறாய்.
மற்றவர்களை போல நீயும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகக்கூடியவள் தானா. என்னால் நம்பமுடியவில்லை மாடஸ்டி!
பிரச்சனையை ஒவ்வொரு கோணத்திலிருந்தும் ஆராய்ந்தேன்.
நீங்கள் யாரும் அறிந்திராதப் உங்களுக்குப் புரி-படாத ஒரு முக்கியமான கோணம்—கோஸத்தின் அனாதை சிறுமியின் அவலநிலை-நான் இந்த முடிவெடுக்க காரணமாகியது.
ஒரு அதிமேதாவியை மேலை நாட்டின் உடமையாக்குவதைவிட முகம் தெரியாத சிறுமியின் வாழ்க்கை உனக்கு முக்கியமாகி விட்டிருக்கிறது. இல்லையா?


ஒரு விஞ்ஞானி இந்தப் பக்கமோ அந்தப்பக்கமோ எல்லையை தாண்டுவது ஒன்றும் புதியவிஷயமல்ல. அதனால் குடிமுழுகி விடுவதில்லை. ஆரம்பத்தில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் காலப் போக்கில் துச்சமாகிவிடும்.
ஆனால் என்முன்னே நின்ற கேள்வி: யாருக்கு துரோகமிழைப்பது? உங்களுக்கா அந்த் சிறுமிக்கா?
நீ எனக்கு எதிராக தீர்மானித்தாய். ஏனெனில் உன் கடந்தகால சரித்திரம் அப்படி.
இனிமேலும் என்னை இம்மாதிரி பணிகளில் ஈடுபட அனுப்பமாட்டீர்களென்று எண்ணுகிறேன்.
அப்படியில்லை மாடஸ்டி. இந்த விவகாரத்தில் வெற்றிபெற வாய்ப்பில்லை என்று ஆரம்பத்திலேயே எதிர்பார்க்கப்பட்டது!
என்ன சொல்கிறீர்கள் விளங்கவில்லை எனக்கு.
முதல் பரிசு கிட்டாவிடினும் இரண்டாவது பரிசாவது கிட்டியதே என்ற திருப்தி நிலவுகிறது. உனக்கு நன்றி சொல்ல சொல்லி எனக்கு செய்தி வந்து இருக்கிறது.


கோஸத் மேற்கிந்திய நாடுகளுக்கு எப்படி பயன்பட மாட்டாரோ அதே போல் கீழை நாட்டினருக்கும் இனி பயன்படமாட்டார் அவர் இறந்துவிட்டார் மாடஸ்டி.


கோஸத்- இறந்துவிட்டாரா? எப்படி?
நீயும் வில்லியும் ப்ரீ டவுனில் டெஸாவின் கப்பலைவிட்டு வெளியேறவில்லை என்ற செய்தி எங்களை சிந்திக்க செய்தது.


தேடும் விமானம் ஒன்று அந்த கப்பல் ஒரு தீவின் அருகே தரை தட்டி நிற்பதை கண்டுபிடித்தது. அது உன் வேலையாகத் தானிருக்கும் என்று நம்பப்பட்டது.


அடுத்த சில மணி நேரத்தில் அமெரிக்க நாசகாரி கப்பல் ஒன்று அங்கே சென்று மீட்பு பணியில் உதவி செய்ய வந்திருப்பதான முகாந்திரத்தோடு அருகே நெருங்கியது. டெஸா மறுக்க வாய்ப்பில்லாத சூழ்நிலை.


அப்போது கோஸத்காலைகப் பகுதியிலிருந்து தான் தப்பி வந்துவிட்டதாக கத்திக் கொண்டே வந்திருக்கிறார். இதற்கிடையே கப்பலின் மீது அமெரிக்க படையினர் ஆதிக்கம் பெற் றிருந்தனர்.
கோஸத் எப்படி இறந்தார்?
அந்த ரஷ்ய ஒற்றன் அவரை சுட்டுவிட்டான்
எதிர் தரப்பினரும் கோஸத்தை நம் மை போலவே மதி ப்பிட்டிருக்கின்றனர். எதிரிகளுக்கு பயன் படுவதைவிட அவர் செத்தொழிவதே மேல் என்றுதீர்மானித்து இருக்கிறார்கள்
ஆக அந்த சிறுமி நிரந் தரமாகவே அனாதை யாகிவிட்டாளில்லையா?
நீ ரொம்பவும் நொந்து கொள்ளத் தேவையில்லை என்பது என் கருத்து.
72


ஆமாம். என்னுலானதை செய்துவிட்டேன், அதன் பிறகு விதிவிட்ட வழி.
இந்த பாடம் அந்தக் காலத்திலேயே புகட்டபட்டு விட்டது எனக்கு.
நம் சந்திப்பின் விளைவை அறிய வில்லி விரும்பக்கூடும்.
அவரோடு தொடர்பு கொள்ள போகிருயா?
சில தினங்களை அவருடன் கழிக்க எண்ணியுள்ளேன்.




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸ் வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626 123, போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி-626 123.

# அதிரடிக் கடிதங்கள்!



**● K கண்ணகுமார், வடக்குப்புதுப்பாளையம்.**

லயன் காமிக்ஸின் 3 – வது ஆண்டுமலரான அதிரடிப்படையை படித்தேன். மிக அருமை. சாகசங்களும் பிரமாதம். ஜான்-வெஸ்ட். மெக்கன்ஸி, லாயிட், ஹென்றி ஆகியோரின் சாகஸங்கள் மனதைக் கவர்ந்தது. தீபாவளி ஸ்பெஷல் விளம்பரம் சூப்பர். அதிரடிப் படையின் அட்டைப்படம் கதையைப் போலவே மிகவும் சூப்பர். இம்மாதிரி கதைகளை வெளியிடும் லயனுக்கு என் மனமார்ந்த நன்றி.

**● C. R. செந்தில் குமரன், கரூர்.**

அதிரடிப் படையை பார்த்தவுடன் என்ன பரபரப்பு! அதை படித்தவுடன் என்ன விருவிறுப்பு! இந்த அதிரடிப்படையை மீண்டும் காண முடியுமா?

**● I இஸ்மாயில், தல்லாகுளம் மதுரை-2.**

''அதிரடிப்படை'' கதை காமிக்ஸ் உலகிற்கு ஒரு திருப்புமுனை!

**● M S. ஆனந்த ராஜன், கீரைக்காரன்தட்டு, திசை.**

அதிரடிப்படை கதை படு பிரமாதம் கிச்சு, விச்சு சிரிப்புகள் கிளுகிளுப்பூட்டி விட்டன. தீபாவளி மலரில் 12 கதைகளா அடேயப்பா!

**● M. சிராஜ்தீன், திருப்பூர் 4.**

வானத்து நிலா நீராட இறைவன் மேகத்தை படைத்தான். வாசகர்களை மகிழ்விக்க விஜயன் ஆண்டு மலரைப் படைத்தார்! தொடரட்டும் லயனின் வளர்ச்சி வளரட்டும் வாசகர் மகிழ்ச்சி.

**● M. அகமது அலி. மதுக்கர்.**

''லயன் காமிக்ஸ்'' ஆண்டு மலர் சூப்பர். இது ஆண்டு மலரா? இல்லை எங்களை ஆட்டி வைக்கும் மலரா?

**● G. K. அஹ்மத் பாஷா, திருப்பத்தூர்-2.**

ஒவ்வொரு ஆண்டிலும் ஆண்டுமலரை ரூபாய் 8 –ல் அட்டகாசமான சித்திரக் கதைகளை வழங்கும் லயனுக்கு நன்றிகலந்த வாழ்த்துக்கள்!

**● V ரேவதி, திண்டுக்கல்.**

அதிரடிப் படை! அதிவேகத்தில் அட்டகாசமாக இருந்தது. நான்கு கதாநாயகர்கள் தூள் கிளப்பி விட்டார்கள். லயன் காமிக்ஸின் புகழை உணர்த்த இது ஒரு எடுத்துக் காட்டு.



Scanned by CamScanner




Scanned by CamScanner


பயங்கர நாடகம்!
பிரிட்டிஷ் உளவுத்துறையில்
பணியாற்றி வந்த மற்ற துப்
பறியும் ஏஜெண்டுகளைப்
போலவே, SI-6 விசேஷப்
பிரிவிலிருந்த ஜார்ஜுமடிரே
க்கும் அவ்வப்போது கடுமை
யான நடைமுறை பயிற்சி
யில் ஈடுபட்டனர்.
ஜீப் உச்சவேகத்தில்
விரைந்து
கொண்டிருக்கையில்
பிரேக் திடீரெ
ன்று கெட்டுப்போ
ஞல் உயிர்பிழைக்க
வேறு உபாயமே
கிடையாது டிரேக்!
கட்டுப்பாடிழந்த
வாகனத்திலிரு
ந்து வெளியே
பாய்வது எனக்கு
கொஞ்சமும் பிடி
க்காத பயிற்சி
இப்படியே வேக
மாக உருண்டு
சென்று
பாதுகாப்பாக எங்கே
யாவது ஒதுங்கிக்
கொண்டு விட
வேண்டும். அடுத்து
என்ன நடக்கும்
என்று தெரியுமில்
லையா உனக்கு?
பாறைகள் நம்
மண்டையை
பிளந்து விடும்
அபாயம்
உண்டு
77









Scanned by CamScanner



S.I-ன் தலைவர் கர்னல் ஹண்ட்டர் தான் அந்த பயிற்சியை மேற்பார்வை யிட்டுக் கொண்டிருந்தார்.
நிஜமான தோட்டாக்களாக இருந்திருந்தால் இன்நேரம் நீ செத்து விழுந்திருப்பாய் டிரேக்!
கவனமாக செய் டிரேக்!
நீ ஒன்றும் எனக்கு யோசனை சொல்லத் தேவையில்லை!
இன்னமும் எனக்கு திருப்தி ஏற்படவில்லை டிரேக்- இந்த கடைசி பயிற்சியிலாவது உன் திறமையை நிரூபித்துக் காட்டு- பார்க்கலாம்!
இதை ஒரு பந்தயமாகவே நடத்திப்பார்த்து விடலாமா ஜார்ஜ். அப்போது தான் கொஞ்சமாவது சுவாரஸ்யம் இருக்கும்- பயிற்சியில்!






Scanned by CamScanner








Scanned by CamScanner


ஜார்ஜ் வென்றுவிட்டான்! டிரேக் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் வந்து சேரத்தவறி விட்டது மட்டுமின்றி முள் கம்பியிலும் சிக்கிக் கொண்டு விட்டான்!
யாராவது ஓடி வந்து என்னை விடுவியுங்கள் ப்ளீஸ்!


இந்த சோதனைகள் முட்டாள்தனமானவை — வீண் காலவிரயம் வேறென்ன?
தொடர்ந்து உளவாளியாக நீடிக்கத் தேவையான திறமையை நிரூபிக்கத் தவறிவிட்டாய்... டிரேக்! எனவே...








Scanned by CamScanner


திடீரென்று என்ன ஆயிற்று இவனுக்கு? இவனுடைய போக்கு ஒரே புதிராக இருக்கிறதே?
அவன் தன் திறமையை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கவேண்டும்- திறமையற்றவர்களை வைத்துக் கொண்டு உளவுப் பிரிவை நடத்துவது தற்கொலைக்கு ஒப்பானது. நாளை நீங்களிருவரும் சேர்ந்து நடிக்கும் டி.வி படப்பிடிப்பு இருக்கிறதல்லவா? எதற்கும் நீ எச்சரிக்கையோடு இரு!
நம்ப முடியவில்லையே- ஏற்கனவே ஒருமணிநேரம் தாமதமாகிவிட்டது- எல்லோரும் காத்துக் கிடக்கிறார்கள்- டிரேக்கைக் காணோமே!
டைரக்டர் முடியைப் பிய்த்துக் கொள்வதில் அர்த்தமிருக்கிறது. டிரேக் எப்போதும் டாண் என்று நேரத்திற்கு வந்து விடக் கூடியவன!






Scanned by CamScanner


போதும்! போதும்! படப்பிடிப்பில்
கவனம் செலுத்தலாம் வாருங்கள்!
மர உருளைகள் அடுக்கிக் கிடக்கும்
கிடங்கினுள் நீங்களிருவரும் வில்
லனோடு மோதும் காட்சி!
ஓ. கே. நீயும்
வா டிரேக்!


ஆக்ஷன்!
வேட்டையர்கள்
ஜார்ஜ் | டிரேக்
மரக்கிடங்கு காட்சி
காட்சி 12 | டேக் 1
டிரேக் என்ன
காரியம் பண்
ணுகிறான்!


காட்சியைக் கொஞ்சம் மாற்றி விட்டேன் ஜார்ஜ்- என்னைப் பொறுத்த வரையில் வில்லன் நீ தான்!
ஐயோ - அந்த சுழல் ரம்பத்தால் ஜார்ஜைகொல்ல முயற்சிக்கிறான் டிரேக்!


உன்மீது எனக்குள்ள வெறுப்பை இப்போது செயலில் காட்டப்போகிறேன் ஜார்ஜ்
வேண்டாம்- கிட்டே வராதே! டிரேக் உன்னோடு நான் சண்டை போடவேண்டிய நெருக்கடியை ஏற்படுத்தாதே!



உன்னைப் பழி வாங்கியே தீருவேன்!
அந்தப் பயிற்சியில் தேறிவிட்டதால் பெரிய கில்லாடி என்ற நினைப்போ? நானென்றும் உனக்கு சளைத்தவனில்லை என்று இப்போது நிரூபித்துக் காட்டுகிறேன் பார்!
இந்த சுழல் ரம்பத்தை நீ எப்படி சமாளிக்கிறாய் என்று பார்ப்போம்!
நல்லவேளை பளிச்சென்று நான் விலகிக்கொண்டிரா விடில் அந்த மர உருளைக்கு ஏற்பட்ட கதி எனக்கு நேரிட்டிருக்கும்!









Scanned by CamScanner






Scanned by CamScanner


நலமா விசாரிக்கிறாய்? இப்-படி ஓங்கி குத்துவிடுமளவுக்கு திடகாத்திரமாகத்தானிருக்-கிறேனடா முட்டாள்!
அஹ்
கும்!


செய்ய நினைத்ததை நடத்தி விட்டேன். இனி உன் மூஞ்சியில் விழிக்கும் உத்தேசமில்லை எனக்கு-வேறொரு பார்ட்னரை தேடிக் கொள் ஜார்ஜ்!
கண்டபடி பிதற்றுகிறானே திடீரென்று மறைகழன்று விட்டதா பயலுக்கு?






Scanned by CamScanner


ஒருசில தினங்கள் கழிந்தன-
இந்த அணுசக்திக் கூடத்தை வசப்படுத்திக் கொள்வதன் மூலம் மீண்டும் தன் வலிமையை நிரூபித்துக் காட்டபோகிறது எஃகுப் படை!
LOCKWELL
NUCLEAR POWER
STATION
பீரங்கிகள் தயார் நிலையில் இருக்கின்றன-


பூம்! பூம்



LOC WELL
CLEAR POWER
STATION
டமால்!
பயங்கரவாதிகள் தாக்குகிறார்கள்- அபாய எச்சரிக்கை அமைப்பை இயக்கு!
செக்யூரிட்டி நபர்களால் தொல்லை ஏற்படுமுன் தீர்த்து கட்டுங்கள்.


துப்படை என்று பெயர் சூட்டிக் கொண்ட பயங்கர வாதிகள் அந்த அணுசக்திக் கூடத்தை சுலபமாக வசப் படுத்திக் கொண்டுவிட்டனர் அதையடுத்து-
யக் கைதிகளாக நாங்கள் பிடித்து வைத்திருக்கும் நபர்கள் உயிரோடு வெளியில் வரவேண்டுமானால் பத்து மில்லியன் பவுண்டுகளும் இங்கிருந்து நாங்கள் பத்திரமாக வெளியேறிச் செல்ல வாகன வசதியும் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்-
LOCKWELL
UCLEAR POWER
TATION
PO




Scanned by CamScanner






Scanned by CamScanner









Scanned by CamScanner






Scanned by CamScanner









Scanned by CamScanner





Scanned by CamScanner


உன்னை எதிரியாக பாவித்து S.I-6 ஐ விட்டு நான் வெளியேறியதெல்லாம் இவன்களை தந்திரமாக ஏமாற்றி ஊடுருவ திட்டமிட்டு நடத்திய நாடகமாகும்!
இதற்கெல்லாம் தண்டனை மரணம்தான்!


எங்களை கையும்களவு மாகப் பிடிப்பது உன் நோக்கம் இல்லையா?
இருவரையும் தோட் டாக்களால் தீர்த்து கட்டி விடலாம் ரெக்ஸ்!


பிறர் அறியாவண்ணம் சட்டென்று ஒருகணம் விழிகளை மேலே உயர்த்திக் காட்டினான் ஜார்ஜ்-
லேசான தலையசைப்பின் மூலம் சம்மதத்தை தெரிவித்தான் டிரேக்!
ரெடி!


பயங்கரவாதிகளின் துப்பாக்கிகள் முழங்கிய அதே கணத்தில்-
டமீல்... டுமீல்..


ணங்
ஆ ஆ!
ஓ ஓ ஊப்!


டுமீல்... டுமீல்...
விடாதேசுட்டு
கொல்
அவர்களை


அந்த வேலை யை நாங்கள் செய்கிறோமே
ஆபத்து நீங்கிவிட் டது லேடீஸ் அன் ஜெண்டில் மென்! தப்பிவிட்டீர்கள்
ஆ ஆ...!
டுமீல்
எங்கள் உயிரை காப்பாற்றி விட்-டீர்கள் - நன்றி!
இத்தோடு முடிந்தது எங்கள் கதை என்று நடுநடுங்கிக் கொண் டிருந்தோம்!
S.I-6 ன் தலைவர் ஹண்ட்டர் ஜார்ஜையும், டிரேக்கையும் எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருந்தார் - வெளியே!
டிரேக்கின் தந்திரத்துக்கு ஆரம்ப முதலே என் அனுமதியுண்டு தெரியுமா ஜார்ஜ்! இந்த பயங்கரவாதி களை ஊடுருவி ஒழித்துக் கட்ட இந்தவழிதான் சரிஎன்று தோன்றியது!
இந்த சில தினங்களாக டிரேக் இல்லாமல் S.I–6ன் டல்லடித் தது இனி-மீண்டும் சுறுசுறுப் படைந்து விடும்!

அன்பார்ந்த வாசகர்களே,    1-8-87



"தீபாவளி - சூப்பர் ஸ்பெஷல் வரவிருக்கிறது" என்ற விளம்பரம் போன இதழில் வெளியாகியிருந்ததைத் தொடர்ந்து ஏகப்பட்ட கடிதங்கள் வந்து சேர்ந்துள்ளன!

"ஸ்பெஷல் எப்படி இருக்கும் சார்? "10 ரூபாய்க்கான சரக்கு இருக்குமா"?- "உங்கள் துணிச்சலுக்குப் பாராட்டுக்கள்! "12 முழுக் கதைகளா வாவ்!" என்றெல்லாம் விதவிதமான கருத்துக்கள், கேள்விகள்! எல்லோருக்குமே ஸ்பெஷல் எப்படியிருக்கும் என்ற **Curiosity** நிறையவே இருப்பது புரிகிறது!

தொடர்ந்து வரும் மூன்று பக்கங்களில், தீபாவளி ஸ்பெஷலில் வரவிருக்கும் கதைகள் - கதைச் சுருக்கங்களைப் பற்றிய விபரம் உள்ளது. ஸ்பெஷலைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ள ஆவலாயிருந்தால் எனக்குத் தெரியப்படுத்துங்கள். மேற்கொண்டு விபரங்களையும், வண்ணப் போஸ்டர்களையும் அனுப்பி வைக்கின்றேன்!

தீபாவளி அக்டோபர் 21 ம் தேதி வரயிருப்பதால். நமது ஸ்பெஷல் அக்டோபர் 10 ம் தேதிக்கு மேல் கிடைக்கும்! வழக்கம் போல் ஆதரவு தந்து, இந்த சூப்பர்-ஸ்பெஷலையும் ஒரு சூப்பர் சக்சஸாக்க உங்கள் உதவியை பெரிதும் எதிர்பார்க்கிறேன்!

விஜயன்




உங்கள் அபிமான ஹீரோக்கள்!
வருகிறது!
லயன் காமிக்ஸின்
தீபாவளி சூப்பர் ஸ்பெஷல்!
ரூ. 10/-
லயன் காமிக்ஸ்
சூப்பர் ரிப்போர்ட்டர் ஜானி தோன்றும்
ஊடூ சூன்யம்
BAT MAN தோன்றும்
கொலைகார ஜோக்கர்
அற்புதமான சித்திரக் கதைகள்!
108

வீட்டில் அனைவரும் ரசிக்கக் கூடிய ஸ்பெஷல் இது!

புதுமையான சைஸ்!




வளவளப்பான கண்ணாடி அட்டை!

12 அட்டகாசமான கதைகள்!

மறக்க முடியாததொரு காமிக்ஸ் விருந்து!






Scanned by CamScanner

# பனிக் கிச்சு!



எங்கே இவ்வளவு அவசரமாய் ஓடுகிறாய் விச்சு? என்ன விஷயம்?
பனிக்கட்டிகளை உருண்டையாக்கி என் மீது வீச வருகிறது ஒரு பொடியர் பட்டாளம்! அவர்களிடமிருந்து தப்பி ஓடுகிறேன்!
ஹா-ஹா-ஹா!
ஒரு வம்புக்கும் போகாத என்னை விரட்டி விரட்டி உயிரை எடுக்கிறார்களே!
அச்சச்சோ! அவர்கள் வரும் சத்தம் கேட்கிறது! நான் எந்தப் பக்கம் போகிறேன் என்பதை அவர்களிடம் சொல்லி விடாதே கிச்சு!
ஹெ! ஹெ! ஹெ! சின்னப் பையன்களின் குறும்புகளெல்லாம் பெரிது-படுத்துகிறானே விச்சு! இன்னும் கொஞ்சம் உதைபட்டால்தான் அவன் கொழுப்பு குறையும்!
கதவைப் பூட்டிவிட்டு நானே அந்தப் பசங்களைக் கூட்டிக் கொண்டு விச்சுவைத் துரத்தப் போகிறேன்!






Scanned by CamScanner



Scanned by CamScanner


அடுத்த வெளியீடு!
புது ஹீரோ ஜஸ்டிஸ் தோன்றும்
லயன் காமிக்ஸ்
கராத்தே டாக்டர்!
ரூ. 2/-


சர்வதேச சூப்பர் ஹீரோக்களின் சாகஸங்கள்!
கேப்டன் பிரின்ஸ் தோன்றும்
விசித்திரப் பாடம்
C.I.D. லாரன்ஸ் தோன்றும்
நடுக்கடல் கொள்ளை
லக்கி லூக் தோன்றும்
பயங்கரப் பொடியன்
முழு வண்ணக் கதை!
உங்கள் அபிமான விச்சு & கிச்சு
கருப்புக் கிழவியின் கதைகள்
ஏமற்றம் கொண்டு விபரங்களுக்கு
எழுதி அனுப்புங்கள்!



தீபாவளி ஸ்பெஷல் வருதுடோய்!
... சூப்பர் ஸ்பெஷல் வருதுடோய்!
விபரம் உள்ளே!
Register